# சுதேசிய மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIIM)
# கொழும்பு பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரல்

1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டம் மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க PGIIM கட்டளைச் சட்டம் மற்றும் அதன் தொடர்ச்சியான திருத்தங்கள் மற்றும் 2024 ஜனவரி 01 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) 01/2024 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் விதிகளுக்கமைவாக சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் (PGIIM) பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் மருத்துவம் அல்லது சுதேச மருத்துவ பட்டம் மற்றும் சபை சான்றிதழ் அல்லது அதற்கு இணையானது அல்லது கலாநிதி ஒருவராக (Phd அல்லது அதற்கு இணையானது) மருத்துவ பட்டத்தை (MD/MS) பெற்றிருத்தல் வேண்டும். மருத்துவ தகைமையை பெற்ற பின்னர் ஐந்து (05) ஆண்டுகள் நிர்வாக அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு புதிய பணிப்பாளர் ஒருவராக தலைமைத்துவத்தை வழங்குவது மற்றும் PGIIM கட்டளைச் சட்டத்தில் பட்டியலிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான அனுபவத்துடன் விண்ணப்ப இறுதித் திகதிக்கு 63 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் முந்தைய அனுபவம் சாதகமாக அமையும். PGIIM/ பணிப்பாளர் நிறுவனத்தின் முழு நேர அதிகாரி ஒருவர் என்பதோடு PGIIM இன் முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்விசார் அதிகாரி மற்றும் கணக்கியல் அதிகாரி ஆவார். பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். அவர் PGIIM முகாமைத்துவ சபை மற்றும் அதன் அனைத்து கற்றல் சபைகளுக்கும் பதவி வழி உறுப்பினர் ஒருவராவார்.

**விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்.**

I. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் (PGIIM இணையதளத்தில் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்)

II. நிறுவனத்தை மேம்படுத்துவதற்கான நோக்கு அறிக்கை ஒன்று.

III. பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அந்த பதவியில் விண்ணப்பதாரர் அடைய முன்மொழியும் சுருக்கமான அறிக்கை ஒன்று.

IV. விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ் (பிறப்புச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்) மற்றும் தொடர்பு விபரங்கள் உட்பட (ஆதார ஆவணங்களுடன்) முழுமையான சுயவிபரக் கோவை.

V. நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர் விண்ணப்பதாரராக இருந்தால் அல்லது முன்னர் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் இருந்திருந்தால், அவர் தனது முதல் பதவிக்காலத்தில் பெற்ற சாதனைகளை விளக்கும் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

VI. விண்ணப்பதாரர் அரச துறை, கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள் மற்றும் சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் தவிர உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுவதாயின், அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரை விடுவிப்பது தொடர்பில் குறிப்பிட்டு தொழில் வழங்குநரிடம் இருந்து பெறப்படும் கடிதம் ஒன்று.

2024 ஜனவரி 01ஆம் திகதியுடைய 01/2024 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களின் விதிமுறைகளின்படி தேர்வு நடைமுறைகள் அமையும்.

01/2024ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபம் மற்றும் PGIIM கட்டளைச் சட்டத்தை முறையே UGC மற்றும் PGIIM இணையதளங்களில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

விண்ணப்பங்களை **2026 செப்டெம்பர் 14ஆம்** திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம், 5ஆவது மாடி, தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கொட்டா வீதி, பொரளை என்ற முகவரிக்கு பட்டியலிடப்பட்ட (I தொடக்கம் VI வரை) ஆவணங்களின் மென் பிரதி ஒன்றுடன் PDF வடிவில் கீழ் தரப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் அல்லது மேலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்**
**செயலாளர் - முகாமைத்துவச் சபைக்கான**
**சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**5ஆவது மாடி, தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை,**
**கொட்டா வீதி, பொரளை.**
**14.09.2026**
***recruitments@pgiimed.cmb.ac.lk***